24th January 1964]

MR. CHAIRMAN : The question is—

"That the Madras (Added Territories) Extension of Laws Bill, 1963 (L.A. Bill No. 29 of 1963), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

V—GOVERNMENT RESOLUTIONS.

(1) RESOLUTION *re* WARHOUSING CORPORATION.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, on behalf of my Hon. Colleague Sri N. S. S. Manradiar, I move the following Resolution :— 11-30 a.m.

'Whereas the Central Warehousing Corporation and the State Warehousing Corporation established under the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962), are empowered to run warehouses for the storage of agricultural produce, seeds, manures, fertilizers, agricultural implements and any notified commodity, being commodities with respect to which Parliament has power to make laws by virtue of Entry 33 of List III (Concurrent List) in the Seventh Schedule to the Constitution of India;

And whereas it appears to this Council to be desirable that legislation should be undertaken to enable the said Corporations to store in their warehouses other commodities also in addition to those mentioned in the aforesaid Central Act;

And whereas legislation for the purpose mentioned above is relatable to matters enumerated in Entry 26 and Entry 27 of List II (State list) of the Seventh Schedule to the Constitution of India with respect to which Parliament has no power to make a law for the States except as provided in Articles 249 and 250 thereof;

And whereas it appears to this Council to be desirable that such legislation should be undertaken by Parliament;

Now, therefore, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India, this Council hereby resolves that storage of commodities other than those covered by the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962), in the warehouses run by the Corporations established under that Act shall, in this State, be regulated by an Act of Parliament."

Sir, I may briefly explain the point. Under the present Act the Corporation can store only agricultural produce such as seeds, manures, fertilizers, implements, etc. There have been repeated suggestions from the people here as also elsewhere that they should be allowed to store commodities like tobacco, lac and wool, etc. These are not matters in respect of which Parliament can pass a law. Since the Warehousing Act is a Central Act the

[Sri R. Venkataraman] [24th January 1964

concurrence of the State is required to enable Parliament to pass a law whereby warehouses established under the Central Act could be utilised for storing articles like tobacco, lac, wool, etc. This is to enable the present warehouses to accommodate more commodities which are of use and demand in various parts of the country. For instance, if you take Bengal, there may be greater demand for warehouse space for lac. If you take Andhra, there will be greater demand for warehouse accommodation in respect of tobacco. Not only is it merely storing. If any commodity is deposited in the warehouse for storing, we can get accommodation from Banks by virtue of the deposit receipt issued by the Corporation. Therefore it enables the various industries to make further progress. Sir, it is in the interest of the agriculturists and the people of this country. I move that the resolution be adopted.

MR. CHAIRMAN : The resolution is before the House for discussion.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, விருது நகரிலே **Central Warehousing Corporation** என்று இருக்கிறது. அதிலே நான் ஆலோசகராக இருக்கிறேன். அது மூன்று வருஷமாக நடந்து வருகிறதென்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த **Corporation** ஆனது குறிப்பாக விவசாயிகள், வியாபாரிகள் சாமான்களை நீண்ட காலம் கெட்டுப்போகாமல் வைத்துக்கொள்வதற்காக நல்ல முறையிலே ரசாயன மருந்துக்களைத் தெளித்து பாதுகாத்து வைப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம். அந்த மாதிரி ஸ்தாபனம் இந்தியா பூராவுமிருக்கிறது. ஆனால் நடை முறையிலே என்ன நடக்கிறதென்றால் நமது மாகாணத்திலே எந்த ஊரிலும் விவசாயிகளுக்காக **Co-operative society**-களோ விவசாய பாங்குகளோ இல்லாமலில்லை. சிறிய ஊர்களிலும் கூட இந்த மாதிரி ஸ்தாபனங்களிருப்பதினால், விவசாயிகள் யாரும் இந்த ஸ்தாபனத்திலே தங்கள் தானியப் பொருள்களை வைக்க முன்வரவில்லை. எந்தவகையிலும் ஒரு மூட்டை கூட வைக்க விவசாயிகளின் மனத்தை திருப்ப முடியவில்லை ஏனென்றால் அவர்களுக்கு கடன் வசதி கொடுக்க விவசாய பாங்குகள் இருக்கின்றன. இந்த ஸ்தாபனத்திலே என்ன நடந்து கொண்டிருக்கிறதென்றால் வியாபாரிகள், விவசாயிகளின் சரக்கு போல் காண்பித்து அதிலே வைத்துக் கொண்டு விடுகிறார்கள். ஆகவே இந்த ஸ்தாபனம் விவசாயிகளுக்கு பிரயோசனமில்லாமலிருக்கிறது. எந்தக் காரியத்துக்காக இந்த ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டதோ அதற்கு பிரயோசனமில்லாமல் இருக்கிறதென்று **Central Government** -க்கு அறிவிக்க வேண்டுமென்று நான் சொன்னேன். உண்மையைச் சொல்லிவிட வேண்டுமென்று சொன்னேன். ஆனால் அதிலே இருக்கிற ஆபீசர்கள் எல்லாம் "இதுவெல்லாம் வேண்டாம், **Sir,** இது இருந்துவிட்டு போகட்டும்" என்று சொல்லுகிறார்கள். அந்த முறையிலே இந்த ஸ்தாபனம் நடந்து கொண்டிருக்கிறது. அதே சமயத்திலே மந்திரி அவர்கள்

24th January 1964] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

விலைவாசி உயர்வைத் தடுப்பதற்காக சிறந்த முறையிலே முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். உணவுப்பொருள்களுக்காக bank- கள் advance கொடுப்பதில்லை. இது நண்பர் பாலசுப்பிரமணிய ஐயர் போன்ற பாங்கிலே சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இந்த warehousing corporation மூலம் வியாபாரிகளுக்கு பணம் கிடைத்து விடுகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே Hoarding -ஐத் தடுப்பதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே Warehousing Corporation ஸ்தாபனத்தை பற்றி நண்பர் ஜெயராம ரெட்டியார் பேசினார். அவர் அந்த சட்டத்தை படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் மாத்திரம் warehouse இலே உணவுப் பொருளை கொண்டு போய் வைக்க வேண்டுமென்பது சட்டமல்ல. விவசாயிகளும் வியாபாரிகளும் அந்த warehouse லே கொண்டு போய் வைக்கலாமென்று சட்டமிருக்கிறது. அது என் இருக்கிறதென்றால் நம்ப நாட்டிலே உணவுப் பொருள் போதாக் குறை ஜாஸ்தியாக இருக்கிறது. போதாக்குறை ஜாஸ்தியாக இருப்பதினால், பொருள்கள் சேதமாகாமல் இருக்க warehouse லே சாமான்களை கொண்டு வந்து வைத்த பிறகு அவைகளுக்கு பக்குவமாக பூச்சி மருந்து அடித்து சுத்தமாக பாதுகாத்து வைத்திருக்கிற வேலையை warehouse செய்துகொண்டு வருகிறது.

* **திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** விவசாயிகள் என்று சொன்னால்தான் பாங்கிலே loan கொடுக்கிறார்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை.

* **திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர்:** விவசாயிகள் என்று சொன்னால்தான் பாங்கியிலே loan கொடுக்கிறார்கள் என்பது அல்ல. warehouse லே உணவுப் பொருள்களை வைத்து அந்த ரசீதை கொண்டு போய் கொடுத்தால், பாங்கிலே எல்லாருக்கும் loan கொடுக்கிறார்கள். உணவுப் பொருள்கள் சேதமாகிறது. சரியான பராமரிப்பு இல்லாமலிருப்பதினால் சேதமாகிறது. உணவுப் பொருள்களிலே 100-க்கு 10 சதவிகிதம் சேதமாகிறது. நம்ப நாட்டிலே உணவுப்பொருள்கள் 10 சதவிகிதம் குறைவாக இருக்கிறது. சேதமாவதும் 10 சத விகிதம்தான். இந்த சேதத்தைக் குறைத்தால், நம் பத்தாக்குறை தீர்ந்து போகும். விவசாயிகளிடமிருக்கிற உணவுதான்யங்கள் மட்டுமல்ல, வியாபாரிகளிடமிருக்கிற உணவுப் பொருள் கெட்டுப் போனாலும் நாட்டுக்கு நஷ்டம். விவசாயிகளிடமிருக்கிற உணவுப் பொருள்களை சேதமில்லாமல் பாதுகாத்து வைக்கத்தான் இந்த warehouse இருக்கிறது. விவசாயிகளும் வியாபாரிகளும் சேதமில்லாமல் கொண்டு போய் உணவு பொருள்களை வைப்பதற்கும், வைத்த பொருள்களின் ரசீதை காண்பித்து loan வாங்குவதற்கும் இந்த ஸ்தாபனம் இருக்கிறது. விவசாயிகளின் பொருள்களுக்கு மட்டும்தான் bank loan கொடுப்

[திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர்] [24th January 1964

பார்கள் என்பது அல்ல. warehouse உணவுப் பொருள்களை கொண்டுபோய் வைத்து அந்த ரசீதை யார் கொண்டு போனாலும் loan பாங்கிலே கொடுக்கிறார்கள். அதாவது வியாபாரிகளாக இருந்தாலும் அவர்கள் மூன்று வருஷத்தில் எவ்வளவு கடன் வாங்கினார்களோ அதற்கு மேல் பாங்கில் கடன் கொடுக்கக்கூடாது என்று சட்டம் இருப்பதால் அதிகமாக ஹோர்டு செய்வதாகச் சொல்ல முடியாது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: பாங்கில் உணவுப்பொருள்

11-40 களுக்கும் வியாபாரிகளுக்குக் கொடுப்பதில்லை. அதே பொருள்
உ.ப. களுக்கு வேர்ஹவுஸிங் கார்ப்பரேஷனில் கொடுக்கிறார்கள்.

* **திரு. வி. கே. பழனிசாமி கவுண்டர்:** உணவுப் பொருள்களுக்குக் கொடுக்கக்கூடாது என்பது ஒன்றுமில்லை. மூன்று வருஷங்களுக்கு எந்த அளவு வியாபாரம் செய்தார்களோ, எவ்வளவு கடன் வாங்கினார்களோ அந்த அளவுக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று சட்டமிருக்கிறது. வேர்ஹவுசிங் ரசீதைக் காண்பித்தால் அப்படிக் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. இதனால் ஹோர்டு செய்து பணம் வாங்குகிறார்கள் என்பதில்லை. விவசாயிகளுக்கு என்று அது இருக்கிறது, வியாபாரிகளும் அதை உபயோகிக்கிறார்கள் என்று சொன்னார்கள். வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் உணவுப்பொருள்கள் சேதமாகாமல் இருப்பதற்காகத்தான் சட்டம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதை இவர்கள் கன்ஃப்யூஸ் செய்து கொண்டார்கள். ஆகையால் இது இரண்டு பேருக்குமேதான் உண்டாக்கப்பட்டது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்:** தலைவர் அவர்களே, இந்த வேர்ஹவுசிங் கார்ப்பரேஷன் காஞ்சீபுரத்திலும் இருக்கிறது. அதற்குத் தலைவன் நான். அதுபற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் யார் அதிக லாபம் அடைகிறார்கள் என்றால் வியாபாரிகள் தான். உணவுப்பொருள்களை பிளாக்மார்க்கெட்டில் சரக்கை மறைத்து வைத்து வியாபாரம் செய்வதைத் தடுக்க சர்க்கார் இந்தத் திட்டம் செய்திருக்கிறார்கள். இதில் வைத்துவிட்டால் பிளாக் மார்க்கெட் செய்யமுடியாது. இதனால் அதிக லாபம் அடைவது விவசாயிகளைவிட வியாபாரிகள்தான். ஷெட்யூல் பாங்கில் குறிப்பிட்ட அளவுக்குத்தான் கடன் வாங்க முடியும். இங்கு ஏராளமாகக் கொடுக்கலாம். அங்கே தீர்த்துக்கொண்டு மேற்கொண்டு இங்கு வருகிறார்கள். இரண்டு இடம் கடன் பெற அவர்களுக்கு வசதி. சுங்க அதிகாரிகள் மக்களுக்காக வேலை செய்கின்ற அதிகாரிகள் இருக்கின்றார்களே அவர்களுக்கு உட்கார்ந்த இடத்திலேயே நெல் வந்துவிட வேண்டும். இந்த கார்ப்பரேஷன் டவுனில்தான் இருக்கிறது. கிராமங்களில் இல்லை. கிராமத்திலிருந்து பொருள்களை இங்கே கொண்டுவர சங்கடப்படு கிறான் விவசாயி. வந்தவுடனே நேராக மார்க்கெட்டில் விற்பது தான் அவனுக்கு சுலபம். இங்கே வந்து வைத்துவிட்டுப் போவதில் அவனுக்கு சிரமம்தான் அதிகம். ஆகையால் இங்கே கொண்டுவந்து வேர்ஹவுசிங் கார்ப்பரேஷனில் அவன் வைப்பதில்லை. கிராமத்தில்

24th January 1964] [திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்]

போய் அறுவடை ஆகும்போது அங்கேயே வாங்கி வேர்ஹவுசிங்கில் சேர்க்க வேண்டும். இவற்றை கிராமங்களில் வைக்கவேண்டும். அல்லது அவன் வருகிற மார்க்கெட்டிலே வைக்கவேண்டும். டவுனில் வைத்திருந்தால் அவன் டவுனுக்கு விற்பதற்கு வருகிறனே தவிர ஸ்டாக் வைக்க வருவதில்லை. அவனை இங்கே சேர்த்து வை என்றால் வைப்பானா? அவனுக்கு அதில் இஷ்டமில்லை. அதனால் அவர்களுக்கு லாபமில்லை இதனால். இதனால் விவசாயிகளுக்கு லாபம் வரவும் உணவுப்பொருள்கள் சேதமாகாமலும் பாதுகாக்க வேண்டும். லாபம் அடைகிறவர்கள் வியாபாரிகள்தான் என்பது என் அபிப்ராயம்.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர்: தலைவர் அவர்களே, இரண்டு பேரும் சொல்கிற விஷயத்தைப் பார்த்தால் இந்தத் தீர்மானம் கூடாது என்று சொல்வது போலப் படுவதாக அர்த்தம் செய்து கொண்டேன். விவசாயப் பொருள்களோடு கூட இன்னும் சில புகையிலை, கம்பளி இதுமாதிரியான பொருள்களை அங்கு வைக்கலாம் என்பதற்கு இப்போது தீர்மானம் போட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால் அவர் சொல்வது போல வியாபாரிகளுக்கு வசதியிருந்தால்தான் பண்ணியிருப்பார்கள். விவசாயிகள் தவிர மற்றவர்களுக்கு இல்லை என்று சட்டமிருந்தால் இந்தத் தீர்மானமே வேண்டியதில்லை. அவர் சொல்வது மற்றப் பொருள்களை கொண்டு போய் வைக்கக்கூடாது என்று சொல்வது போல நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் இந்தத் தீர்மானத்திற்கு அவசியமேயில்லை.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: நடைமுறையில் ஸ்டேட் பாங்குக்கு இல்லாத சலுகையை நாங்கள் அனுபவிக்கிறோம். ஸ்டேட் பாங்குக்கு அதைக் கொடுத்தால் நல்லது. இங்கே கொடுப்பதை அங்கே ஏன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-30 a.m.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர்: பொதுவாக ஒரு விஷயத்தைப் பேசலாம் என்று தோன்றுகிறது. 282-வது சட்டமிருக்கிறது கான்ஸ்டிட்யூஷனில். நாம் தீர்மானம் செய்ய வேண்டும். இன்னும் இதர ராஜ்யங்களும் தீர்மானம் செய்யவேண்டும். அதற்குப் பிறகு தான் இங்கு அமுலுக்கு வரவேண்டும். சட்டம் வந்த பிறகு நாம் ஒத்துக்கொள்கிறோம் என்று தீர்மானம் செய்யலாம். பார்லிமெண்டுக்கு இங்கு அதிகாரம் கிடையாது. நம்முடைய ராஜ்யத்தில் அமுலுக்குக் கொண்டுவருவதற்கு நாம் இன்னொரு தீர்மானம் செய்ய வேண்டும். முதலில் செய்தபிறகு இரண்டு ராஜ்யங்களும் அதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆந்திரா, மைசூர் எல்லாம் ஒத்துக்கொள்கிறார்களா என்று கேட்க வேண்டும். அப்படி நடந்த பிறகு சட்டம் கொண்டு வருவார்கள். இப்போது அவர்கள் அதிகாரத்தைக் கொடுப்பதற்குக் கவலைப்படுகிறார்கள். இரண்டு பேருக்கும் அதிகாரம் உள்ளது. 26, 27 என்பது இரண்டு பேருக்கும் உள்ள அதிகாரங்கள்தான். ஆகையால் அதை நாமே கவனிக்கலாமே.

[திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர்] [24th January 1964

நமக்கே கொடுப்பதற்கு அதிகாரம் இருக்கும்போது இந்தத் தீர்மானத்தை நாமே போட்டு மற்ற ராஜ்யங்களையும் கேட்டு அவர்களும் இதை ஒப்புக்கொண்டு பிறகு பார்லிமெண்டுக்குப் போய் அதன் பிறகு இங்கு தீர்மானம் செய்வது ஏன் என்று தெரியவில்லை. பார்லிமெண்டுக்கு அதிகாரம் இல்லாமல் இருப்பதுதான் நல்லது. சட்டப் பிரகாரம் மேற்கொண்டு அதிகாரம் இல்லாமல் இருப்பது தான் நல்லது. ஆகையால் இப்போது அவர்களை வரவழைக்க வேண்டாமென்று நினைக்கிறேன். அதை நாமே செய்யலாம். கன்கரண்ட் லிஸ்டில் சேர்த்திருப்பதால் நமக்கு அதிகாரம் இருக்கிறது. நீங்கள் சொல்வதையும் சேர்த்து செய்யலாம் என்று நீங்கள் சொல்லியதிலிருந்து தெரிகிறது. மத்திய அரசாங்கமே இங்கு ஒரு சட்டத்தை அமுல் நடத்தி அவர்கள் வந்து கவனிப்பதைக் காட்டிலும் நமக்கும் அதிகாரம் 26, 27-ல் சப்ஜெக்ட் 33 என்று இருக்கிறது. முக்கியமாக இந்தியா முழுவதற்கும் இருக்கிற சில சாமான்களைத் தவிர பாக்கி பொருள்களுக்கு நமக்கும் அவர்களுக்கும் தனியாக இருக்க சட்டம் கொண்டுவர வேண்டும். ஆகையால் அதை நாமே செய்ய யோசிக்கலாமே. இந்த ஒரு தீர்மானம் மட்டும் இருந்தால் பிரயோஜனம் ஆகும் என்று தோன்றவில்லை. 282-ஐ அடிக்கடி உபயோகப்படுத்தாமல் இருந்தால் தேவலை என்பது என் அபிப்ராயம். நமக்கு அதிகாரம் பூரணமாக இருப்பதால் அதை நாமே செய்யலாம்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: தலைவர் அவர்களே, ஸ்டேட் வேர்ஹவுசிங் கார்ப்பரேஷன் பற்றி தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த நிலைமையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரே காரியத்தைச் செய்ய ஒரே ஸ்தாபனத்திற்காக மத்திய அரசாங்கமும் ஸ்டேட் அரசாங்கமும் எதற்காக போட்டி போட்டுக்கொண்டு செய்யவேண்டுமென்று
11-50 a.m. எனக்கு புரியவே இல்லை. முக்கியமாக வரும்படி வரக்கூடிய இடங்களையெல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் நிறைய இருப்பதால்தானே அல்லது செல்வாக்கினாலோ அவர்களுக்கு கொடுத்துவிட வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒரே இடத்தில் மத்திய அரசாங்கமும், ஸ்டேட் அரசாங்கமும் இணைந்து வேலை செய்து கொண்டிருக்கும்போது இந்த ஸ்தாபனத்தை ஸ்டேட் அரசாங்கம் மட்டும் வைத்து ஸ்டேட்டுக்கு தகுந்தவாறு ஏன் செய்யக் கூடாது? மத்திய அரசாங்கம் ஒரு ஸ்தாபனமும் ஸ்டேட் அரசாங்கம் ஒரு ஸ்தாபனமும் எதற்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை. நானும் அதில் டைரக்டராக இருக்கிறேன். கனம் உப தலைவர் அவர்கள்கூட டைரக்டராக இருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த சிரமங்கள் தெரியும். ஸ்டேட் அரசாங்கம் நடத்துவதில் வேர்ஹவுசிங்கில் வாடகை குறைவாக வைத்து நடத்தியும் நஷ்டம்தான் வந்து கொண்டிருக்கிறது. அதில் இன்னும் பல சரக்குகளை வைக்கலாம் என்று ஆசையும் இருக்கிறது. அதற்கு சட்டம் குறுக்கே நிற்கிறது. அவைகளை நீக்க அந்தந்த ஸ்டேட் நடத்தும் அளவில் ஃபைனான்ஷியல் அசிஸ்டென்ஸ் மட்டும் சென்ட்ரலில்

24th January 1964] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

வைத்துக்கொள்வது பற்றி ஆட்சேபனே இல்லே. இரண்டும் ஒரே காரியத்தை ஏன் செய்ய வேண்டும்? மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு நிறைய அதிகாரத்தைக் கொடுத்து அவைகளுக்குத் தேவைப்படி அந்தந்த மக்களுக்கு அனுகூலம் செய்தால் நன்ருக இருக்கும். இதைக் கட்டுவதற்கு வேண்டிய இடம் முதலியவை சீக்கிரம் நமக்கு ஆர்ஜிதம் செய்து கட்டிடங்களே ஏற்படுத்திஞல் இன்னும் இந்த கார்ப்பரேஷனுக்கு வரும்படி நிறைய கிடைக்கும். இது பற்றி மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லி இதை இரண்டுபேரும் செய்யவேண்டிய அவசியம் இல்லே என்று சிபாரிசு செய்யும் என்று நம்புகிறேன். எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் நம்முடைய நிலேமை என்ன ஆகுமென்று பார்த்தால் நாம் எல்லோரும் முனிசிபாலிடிகள் பஞ்சாயத்துக்கள் போன்ற நிலேமைக்குத்தான் வர வேண்டியிருக்குமே தவிர மாநில அரசாங்கம் நினேத்த காரியங்களே நடத்த முடியாது. இதனுல் மக்கள் கஷ்டத்திற்கு ஆளாகிருர்கள். அதனுல்தான் இந்த மாநில உணவுப் பொருள்களே புரக்யர் செய்து மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. நம் மக்களுக்குக் கொடுக்க முடியாமல் போகிறது. நாமும் சில காரியங்களுக்கு மத்திய அரசாங்கத்தை எதிர்பார்க்கிருேம் என்ருலும் நாமும் அதற்காக எல்லாவற்றையும் கொடுத்துவிட வேண்டுமென்பதில்லே. அகில இந்திய ரீதியில் பார்க்க வேண்டுமென்கிருர்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பிறகு நமக்கு அவர்கள் இரும்பு கொடுக்க மாட்டார்கள்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: மனிதனுக்கு உணவுதான் முக்கியம். நமக்கு மத்திய அரசாங்கமும் உதவி செய்துதான் வருகிறது.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர்: உழுவதற்குக் கூட இரும்பு வேண்டியிருக்கிறது.

திரு. எம். சுப்பையா செட்டியார்: நேற்று பதில் சொல்ல சந்தர்ப்பம் இல்லாததால் ஒன்றும் சொல்ல முடியவில்லே. நமக்கு அமெரிக்காவிலிருந்து வந்த அரிசியை வங்காளத்திற்குக் கொடுத்திருக்கலாம். இங்கிருந்து அனுப்பிஞர்கள். அதை மத்திய அரசாங்கம் கூடுதலாக அங்கு விற்கவில்லே என்று நேற்று சொன்ஞர்கள். வங்காள அரசாங்கம் எவ்வளவுக்கு விற்பார்கள் என்று புரியாமல் இருந்தது. வங்காளத்தில் கொடுத்த அறிக்கையைப் பத்திரிகையில் பார்த்தால் அதில் ரூ. 30 குறைவாக விற்கவில்லே என்பது தெரிகிறது. மத்திய அரசாங்கத்தின் தலேயீடு எதிலும் ஜாஸ்தி இருக்கக்கூடாது. அவர்கள் சொல்வதைக் கேட்டு நாம் செயல்பட்டுக்கொண்டிருந்தால் நமக்கு ஒன்றும் பிரயோஜனமில்லே. அண்ணன் தம்பி போல இணந்து அவர்களுக்கும் கொஞ்சம் விட்டுக்கொடுத்து அவர்களும் அதைப்போல நடந்துகொண்டால் நல்லது. இரண்டு

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [24th January 1964

ஸ்தாபனமாக இந்த கார்ப்பரேஷன் செயல்படுவதை நிறுத்தி மாநிலத்தைப் பொருத்தவரையில் மாநில அரசாங்கம் தான் இதை நடத்த வேண்டுமென்ற உரிமையைப் பெறவேண்டும்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சேர்மென் அவர்களே, இந்த விவாதம் தீர்மானத்தை ஒட்டியது மட்டுமல்ல. அது ஒரு விதத்தில் நல்லது என்றுதான் நினைக்கிறேன். ஏனென்றால் சாதாரணமாக, சட்டசபையில் இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் நன்றாகக் கவனிப்பதன் மூலமாகத்தான், நம்முடைய வருங்காலத் திட்டங்களை அமைப்பதற்கும், நடைமுறையில் நல்ல வழியில் இவைகளை எல்லாம் நடத்திச் செல்வதற்கும் உதவிகரமாய் இருக்கும்.

முதன் முதலாக கனம் அங்கத்தினர் சுப்பையா செட்டியார் அவர்கள் சொன்னார்கள். எதற்காக இந்த இரட்டிப்பு இருப்பது, ராஜ்ய சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் **Godowns** எதற்கு என்று கேட்டார்கள். ராஜ்ய சர்க்காருக்கு ஓரளவுக்கு நிதி வசதி இருக்கிறது, சில வசதிகள் செய்கிறோம். சில **Godowns** கட்டுகிறோம். மத்திய சார்க்காருக்கும் சில **Godowns** கட்டுகிறார்கள். இந்த ராஜ்யத்துக்கு எவ்வளவோ, அவ்வளவுதான். ஏனென்றால் இன்றைக்கு நமக்கு உணவுப் பிரச்னையில் ஏற்படுகிற மிகக் கஷ்டமான நிலைமை என்னவென்றால், அறுவடைக் காலத்தில், உடனடியாக விவசாயிகளுக்கு அதை விற்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. அவர்களுக்குக் கடன் கொடுத்து, மகசூலில் ஈடுபடுத்தி, வசதி செய்து கொடுத்தோம். அந்த முறையில் அவர்களுக்கு ஒரு பெரிய சேவை செய்தவர்களாக ஆவோம். ஆனால் அந்தச் சேவை எப்படி நாம் செய்வது? கிராமங்கள் தோறும் இப்போது நாம் **Godowns** அமைத்தால்தான் நல்லது. கிராமத்தில் இருக்கிற நெல் எல்லாவற்றையும் குறைந்தது மூன்று மாதமாவது **store** செய்யும்படியான அளவுக்கு, நாம் **Godowns**-ஐ அமைக்க வேண்டும். ஆனால் இப்போது முடியவில்லை, நம்முடைய நிதி நிலைமை இருக்கும் நிலைமையில் இதை இரட்டிப்பு என்று சொல்வதற்குப் பதில் "மேற்கொண்டு உதவி" என்ற முறையில் எடுத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய ராஜ்ய சர்க்காரிலும் செலவு செய்கிறோம். மத்திய சர்க்காரிலும் செலவு செய்கிறார்கள். எனவேதான் மத்திய சர்க்கார் கார்ப்பரேஷன் என்று சொல்கிறபோது சட்ட விதிகள் முறையில் அவர்கள் திருத்துவார்கள். இப்போது இருக்கின்ற வசதிகள் போதாது என்ற காரணத்தால் மேற்கொண்டு இந்த வசதிகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற காரணத்தால் இதை நாம் செய்கிறோம். அதை நமக்கு உதவி என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். இரட்டிப்புச் செலவு இருக்கிறது. ஆனால் இது வீணை இரட்டிப்புக் காரியம் அல்ல. நமக்கு உதவியானதுதான்.

இரண்டாவது, அப்படி நினைத்தால் பக்கத்தில் இருக்கிற மைசூர் ராஜ்யம் நமக்கு பட்டு நூல் கொடுக்கமாட்டார்கள். அவர்களுக்கு பட்டு ஏராளமாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் ஏராளமான பட்டுத் தறிகள் இருக்கின்றன. இன்று நாம் அரிசியைப்

24th January 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

பற்றி தடை செய்தால் அவர்கள் பட்டைத் தடை செய்வார்கள், அது அவர்களுடைய பேச்சுக்கும் பொருந்தும். தொடர்ந்து சொல்கிற வாதம், Bengal மற்ற இடங்களில் அரிசி அனுப்பியதால் நஷ்டம் ஏற்பட்டது என்று. ஆனால் அப்படிச் சொல்வது சரியல்ல அவர்கள் கஷ்டப்படாமல், ராஜ்யங்கள் இருக்க வேண்டும், நஷ்டம் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதைப் பற்றி யாரும் குறை சொல்ல மாட்டார்கள். அந்த வாதத்துக்கும் ஒரு எல்லை இருக்கிறது என்று மட்டும் நான் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், Warehousing Corporation பற்றிச் சொன்னார்கள். எந்த அளவுக்கு வைக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு அவர்கள் அங்கே பண்டங்கள் வைக்கவில்லை. ஏதோ ஒரு அளவுக்குத்தான் கொண்டு வந்து பண்டங்களை வைக்கின்றார்கள். அதை முழுதும் பயன்படுத்தவில்லை என்றுதான் நாம் கொள்கிறோம். விலைவாசிகளைப் பெரிய அளவுக்குப் பாதிக்கும்படியான அளவுக்கு, இந்த Warehousing Corporation -ல் அந்தப் பண்டங்களை வைப்பதற்கு வசதிகள் கிடையாது. அது அந்த அளவுக்கு நடக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் பண்டங்கள் பாழாகாமல் இருக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். பல இடங்களில் வசதி இல்லாத காரணத்தால், பண்டங்கள் கெட்டுப் போயும், அழிந்தும், பலவிதமான நஷ்டம் ஏற்படுகிறது. அந்த விதமான நஷ்டம் இல்லாமல் இருக்க வேண்டும். பண்டங்கள் கிடைக்காமல் இருக்கிறபோது, கொடுப்பதற்குத்தான் warehouse வைத்திருக்கிறோம். அதை யார் செய்தாலும் நமக்கு நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், அரசியல் சட்டத் திருத்தத்தைப் பற்றி சில கருத்துக்களைக் கனம் அங்கத்தினர் பாலசுப்ரமணிய ஐயர் அவர்கள் சொன்னார்கள். இப்போது பல ராஜ்யங்களில் அப்படித் தீர்மானம் போடுகிறார்கள். இந்தத் தீர்மானம் நம்முடைய நாட்டில் மட்டுமல்ல, இன்னும் எல்லா ராஜ்யங்களிலும் போடுகிறார்கள். இந்த ராஜ்யத்தில் அந்த மாதிரியான வசதிகள் இருந்தால் நல்லது என்று ஒரு அபிப்பிராயம் சொன்னார்கள். அந்த மாதிரி செய்வதற்கு, எல்லா ராஜ்யங்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இரண்டாவது, இந்தப் பண்டங்கள் விஷயம், தீர்மானத்தின் மூலமாக மத்திய சர்க்கார் செய்கிற சட்டத்தில் செய்தால் தான் பணவசதிகளை இந்தக் கார்ப்பரேஷன் மூலமாக கேட்க முடியும். ஏனென்றால் State Corporation -ஐ கேட்க முடியும் என்ற சட்டம் இருக்கிறது. அதுவும் 24-வது Section -ஐப் பார்த்தால், இந்த State Warehousing Corporation, பண்டங்களுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்றால், அது Agricultural Products ஆகத்தான் கொடுக்க முடியும். ஆகையால், மத்திய சர்க்கார் 12-00 noon. திருத்தினால்தான், நாம் அதைப் பெற முடியும். நாம் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கில்லை. Godowns -லிருந்து நாம் பணம் பெற்றுக்கொள்ளலாம் என்றால் மத்திய சட்டத்தைத் திருத்தினால்தான், அவர்கள் அதற்குப் பணம் கொடுக்க முடியும். இல்லாவிட்டால் இந்த மாதிரி பண்டங்களுக்கு அவர்கள் பணம் கொடுக்க

[ஆர். வெங்கட்டராமன்] [24th January 1964

முடியாது. ஆகவேதான், இந்த மத்திய சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த ராஜ்யத்துக்கு அதனல் எந்த விதமான கெடுதலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள் கிறேன்.

Mr. CHAIRMAN : The question is—

'Whereas, the Central Warehousing Corporation and the State Warehousing Corporation established under the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962), are empowered to run warehouses for the storage of agricultural produce, seeds, manures, fertilizers, agricultural implements and any notified commodity, being commodities with respect to which Parliament has power to make laws by virtue of Entry 33 of List III (Concurrent List) in the Seventh Schedule to the Constitution of India;

And whereas, it appears to this Council to be desirable that legislation should be undertaken to enable the said Corporations to store in their warehouses other commodities also in addition to those mentioned in the aforesaid Central Act;

And whereas, legislation for the purpose mentioned above is relatable to matters enumerated in Entry 26 and Entry 27 of List II (State list) of the Seventh Schedule to the Constitution of India with respect to which Parliament has no power to make a law for the States except as provided in Articles 249 and 250 thereof;

And whereas, it appears to this Council to be desirable that such legislation should be undertaken by Parliament;

Now, therefore, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India, this Council hereby resolves that storage of commodities other than those covered by the Warehousing Corporations Act, 1962 (Central Act 58 of 1962), in the warehouses run by the Corporations established under that Act shall, in this State, be regulated by an Act of Parliament.'

The resolution was put and carried.

(2) RESOLUTION RE FORMATION OF TOWNSHIPS.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, on behalf of my Hon. Colleague Sri S. M. A. Majid, I move the following Resolution :

"That in pursuance of sub-section (1) of Section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that each of the areas specified in column (1) of the Table below which is a health resort or a labour colony as specified in the corresponding entry in column (2) thereof, be declared to be a township".